அனுமதி கொடுக்கும் நிலை ஏற்பட்டு, நகராட்சிகள் சிலை எடுக்கும் காரியத்தைத் தவிர வேறு காரியம் செய்ய முடியாது என்ற காரணத்தாலேயே இந்தத் தடையை விதித்து இருக்கிறோம். மக்கள் முயற்சி எடுத்து, அந்தக் காரியத்தைச் செய்யவேண்டும் என்று முன்வந்தால் நல்லது. தமிழகத்தில் பேரறிஞர் அண்ணாவின் சிலை ஆங்காங்கே பல இடங்களில் வைக்கப்பட்டிருக்கிறது என்றால், அவர்களிடத்தில் அந்த அளவிற்கு அன்பு கொண்டிருக்கக்கூடிய தோழர்கள், மற்றவர்கள் நன்கொடை செலுத்தி அவை எடுக்கப்பட்டிருக்கின்றன. அரசாங்கத்தின் செலவில் எதுவும் எடுக்கப்படவில்லை. அப்படி மாயூரம் நகராட்சி அனுமதி கேட்டது மறுக்கப்பட்டிருக்கிறது. கடலூர் நகராட்சி மன்றம் வேண்டுகோள் விடுத்திருக்கிறது. அதையும் நிராகரிக்கத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

திரு. இராம. அரங்கண்ணல் : தலைவர் அவர்களே, முன்னாள் வீரர் —மன்னிக்கவும்—அகில இந்தியக் காங்கிரஸ் பழைய தலைவர் திரு. காமராஜர் அவர்களுக்கு சென்னையிலே சிலை எழுப்பப்பட்டிருக்கிறதே அது யாருடைய செலவில் எழுப்பப்பட்ட சிலை ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : தலைவர் அவர்களே, அப்பொழுதிருந்த மாநகராட்சி தன்னுடைய செலவில் அந்தச் சிலையை நிறுவிக் கொடுத்தது. 1968-ல், புதிய அரசு பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு, உத்தரவு பிறப்பித்து, தடை போட்டது. ஆனாலும், உலகத் தமிழ் மாநாடு விழாவை ஒட்டித் தனிப்பட்ட முறையில் அது முக்கியமான ஒரு உலக விழா என்று ஓரிரு சிலைகள் எடுக்க, மாநகராட்சிக்கு அனுமதி கொடுத்திருக்கிறோம்.

இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள ஊராட்சி ஒன்றியங்கள்

263 வினா.—திரு. வீ. மலைக்கண்ணன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள போகலூர், இளையான்குடி, பரமக்குடி ஆகிய மூன்று ஊராட்சி ஒன்றியங்களிலும் உள்ள 154 ஊராட்சி மன்றங்களை நான்கு ஊராட்சி ஒன்றியங்களாகப் பிரிக்கும்படி பொதுமக்களிடமிருந்து ஏதேனும் கோரிக்கை வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அப்படிப் பிரிப்பதற்குச் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) இல்லை.

(இ) எழவில்லை.